உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவ ஜயம்

சிவநாம மஹிமை

திருவிசநல்லூர்

ஸ்ரீதர வேங்கடேச அய்யாவாளின்

"ஆக்யா ஷஷ்டி" என்னும் நூலின்

தமிழாக்கம்

★

பதிப்பாசிரியர் :

சிவபக்திப்பிரசாரமணி, திருத்தொண்டர்மாமணி

ஆங்கீரஸ சர்மா

(சங்கரனடிமை)

★

தாது வருடம் மஹா சிவராத்திரி வெளியீடு

7-3-1997

பிரசுரம்:

ஸ்ரீ சத்யசாய் கிராபிக்ஸ்,

29/1, சரோஜினி தெரு,

தியாகராயநகர் சென்னை-600017.

விலை. ரூ. 4-00

முதல் பதிப்பு—1997—1000 பிரதிகள்.

பதிப்புரிமை இல்லை

யாவர் எத்தனை பிரதிகள் வேண்டுமானாலும் அனுமதியுடனோ அல்லது அனுமதி இல்லாமலோ அச்சிட்டு அவர்கள் இஷ்டம்போல் விலைக்கோ அல்லது இலவசமாகவோ பிரசாரம் செய்யலாம்.

ஸமர்ப்பணம்

நாடெங்கிலுமுள்ள சிவபக்த மணிகளுக்கு இந்த நூல் ஸமர்ப்பணம் செய்யப் படுகிறது.

சிவநாம மஹிமை

திருச்சிற்றம்பலம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

திருச்சிற்றம்பலம்

—திருமூலர் திருமந்திரம்-2716

ஓம் முருகாச்ரமம்

12 ஸ்ரீநிவாச பிள்ளைத்தெரு,

மேற்கு மாம்பலம்

சென்னை-600033

ஆசியுரை

பரமாத்மஸ்வரூபத்தை உணர மகத்தான சக்தியுடன் படைக்கப்பட்ட பிறவி மனிதப்பிறவி. மற்ற நான்கு வித ஜனனங்களிலுமுள்ள ஜீவன்களால் அறிந்து அடைய முடியாத நிலை—"ஸ்வானுபூதி" மனித இனத்திற்கே உரித்தானது. அவனுடைய ஹிருதய கமலத்தில், தாமரை மொட்டு கவிழ்ந்தது போல் இருக்குமிடத்தில் வெகு நுட்பமாக விளங்கும் ஆத்ம சாக்ஷாத்காரம்-அறிவு ஸ்வரூபமாக இருப்பதே அகண்டாகாரமான இந்த பிரபஞ்சம் பூராவும் விரிந்து, பரவி, ஊடுருவி நிற்கும் "பரபிரம்மம்"— அதுவே சர்வ மங்களத்தைக் கொடுக்கும் "சதா சிவம்" என்று அறிபவனே ஞானியாகிறான்.

ஆனால் அந்நிலையெய்த தீர்த்தம், தலம், ஜபம், தபம் தோத்திரம் முதலியவைகளைத் தரிசித்து அப்யசித்து, தக்க குரு உபதேசம் பெற்று பலகாலம் அரும்பாடு பட்டு படிப்படியாக முன்னேறித்தான் அவனுடைய பிறவிப்பயனை அடைய முடியும். இது ஒரே ஜன்மத்தில் சாத்யமில்லாமலும் போகலாம்.

இடைவிடா சிவநாம ஜபத்தின் மூலம், சிறந்த ஞானியாவதுடன், சிவசாரூப்யம் என்ற அற்புத நிலையையும் இந்த ஜன்மத்திலேயே அடைந்து விடலாமென்று நமக்கு

வழிகாட்டுகிறார், "ஸ்ரீதர அய்யாவாள்" என்ற பரம சிவபக்தர், தாம் எழுதிய "ஆக்யாஷஷ்டி" என்ற நூல் மூலம்!

வடமொழியிலுள்ள அந்த நூலைத் தமிழாக்கம் செய்து பாமரனும், படித்து பயனடையப் பேருதவி செய்துள்ளார். சங்கரனடிமை ஸ்ரீ ஆங்கீரஸ வேங்கடேச சர்மா அவர்கள். அந்த புண்யத்தின் பெரும் பகுதியை இந்த நூலை அச்சிட்டு வெளிக்கொணர், திரவிய சகாயம் செய்து உதவிடும் திரு. திலீபன் என்ற அன்பர் அள்ளிக் கொண்டுள்ளார்.

மகத்தான சிவத்தொண்டு புரியும் இவ்விரு சிவ பக்தர் களும் சகலச்ரேயஸ்ஸுக்களையும் பெற்று பரம மங்களத் துடன் பன்னெடுகாலம் வாழ்ந்து மேன்மேலும் சிவத் தொண்டு புரிய எல்லாம் வல்ல முக்கண்ணெம் பெருமான், பிறைமுடியீசன், பரமேச்வரன் அருள் புரிய பிரார்த்திக் கிறோம். எல்லோரும் இன்புற்றிருக்க.

மாசித் திங்கள், 5 ஞாயிறு

ஓம் முருகா

சிவனார் பெருமை

திருச்சிற்றம்பலம்

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன் நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே

பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னாற் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே

திருச்சிற்றம்பலம்

—திருமூலர் திருமந்திரம்

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவ ஜயம்

ஸ்ரீதர வேங்கடேச அய்யர்வாள்

வரலாற்றுச் சுருக்கம்

பதிப்பாசிரியர் எழுதியது

"சிவபெருமானிடமும் அவருடைய நாமத்திலும் எவருக்கு பரிசுத்தமான ஞானம் உண்டோ, அவ்விரண்டிலும் எவருக்கு நிச்சயமான அன்பு உண்டோ, அதே போல அப்பரமேச்வரனிடமும் அவரது நாமாவிடத்தும் ஈடுபட்ட பக்தரிடமும் எவருக்கு மாறாத அன்பு உண்டோ, மற்ற எல்லாவற்றிலும் எவருக்குப் பற்றுதல் இல்லையோ, எவருக்கும் எவரை நாடினவர்க்கும் இறைவனின் நோக்கமும் கருணையும் நிச்சயமானதோ அத்தகைய மனித உருவங்கொண்ட சிவபெருமானான ஸ்ரீதர வேங்கடேசர் என்ற ஸத்குருவை வணங்குகின்றேன்."

—பதிப்பாசிரியர்.

தஞ்சை மாவட்டத்தில் திருவிசநல்லூர் என்ற ஊரில் தெலுங்கு ஸ்மார்த்த பிராம்மண குடும்பத்தில் பிறந்தவர் ஸ்ரீதர வேங்கடேச அய்யாவாள் என்ற பிரசித்தி உடைய இந் நூலாசிரியர். அவருடைய மஹிமையைக் கண்ட ஜனங்கள் அவருடைய பெயரைச்சொல்லாமல் "அய்யாவாள்" என்றே மரியாதையாக அழைத்து வந்தனர். இவருடைய காலம் 17-வது நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

சிவ பக்தியில் சித்தி பெற்ற அய்யர்வாள் அருகிலுள்ள திருவிடைமருதூரிலுள்ள மஹாலிங்கஸ்வாமியை பிரதி தின

மும் தரிசனம் செய்யும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். இரண்டு சமயங்களில் காவிரி வெள்ளம் பெருக்கெடுத்து இவரது சிவ தரிசனத்திற்கு இடையூறாகக் குறுக்கிட்டது. ஒருசமயத்தில் மஹாலிங்க மூர்த்தியே அர்ச்சகர் உருவத்தில் வந்து அய்யாவாளுக்கு விபூதிப் பிரசாதம் கொடுத்ததாகவும், மற்றொரு முறை ஓடக்காரன் வடிவில் வந்து அக்கரைகொண்டு போய்ச் சேர்த்ததாகவும் சொல்லப்படுகிறது.

இவர் பாடிய ஸ்தோத்திரங்கள் 1. குளீரேச்வராஷ்டகம், 2.சிவ பக்த லக்ஷணம், 3.சிவ பக்தி கல்பலதிகா, 4.க்ருஷ்ண த்வாதச மஞ்ஜரீ, 5. தாராவளீ ஸ்துதி, 6. தயா சதகம், 7. மாத்ரு பூத சதகம், 8. ஸ்துதி பத்ததி, 9. ஆர்த்திஹர ஸ்தோத்ரம், 10. ஜம்புநாதாஷ்டகம், 11. டோலா நவரத்ன மாலிகா, 12. தோஷபரிஹாராஷ்டகம், 13. ஆக்யாஷஷ்டி என்பனவாகும்.

ஸ்ரீ. அய்யாவாளைப் பற்றி மிகப் பிரசித்தியாகக் கூறப்பட்டு வருகிறது. ஒருமுறை இவரது வீட்டில் இவர் செய்ய வேண்டிய சிராத்தம் ஒன்று வந்தது. வீட்டில் சிராத்தத்துக்கு வேண்டிய அன்னம் முதலானவைகளெல்லாம் சித்தமான பிறகு அவர் காவிரி நதிக்கு நீராடச் சென்றார். வழியில் ஆதி திராவிடன் ஒருவன் பசியினால் வருந்தி மரணவேதனையில் அகப்பட்டிருந்ததைக் கண்டார். அவரது மனம் உருகியது. சிறிது கூட தாமதிக்காமல் வீட்டிற்குத் திரும்பி சிராத்ததத்திற்காக வரித்திருந்த பிராமணர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட அன்னம் முதலானவற்றை அவனுக்குக் கொடுத்து அவனைக் காப்பாற்றினார். ஆனால் சிராத்தத்திற்கு இடையூறு ஏற்பட்டது. அக்ரஹார அந்தணர்கள் அய்யாவாளுக்கு பிராயச்சித்தமாக கங்கா ஸ்நானத்தைவிதித்தனர் அய்யாவாளுடைய பிரார்த்தனைக்கு இணங்கி கங்கா தேவியானவள் அவருடைய வீட்டுக் கிணற்றிலேயே ஆவாஹனம் ஆனாள். கிணறு பொங்கி எழுந்தது. அதிலே நீராடி மகிழ்ச்சி வெள்ளத்திலே திளைத்தார் ஸ்ரீ அய்யாவாள். இன்றும்

திருவிசநல்லூரில் அய்யாவாள் உத்சவம் என்ற பெயரில் கார்த்திகை அமாவாசை தினத்தன்று இந்த வைபவம் கொண்டாடப்படுகிறது. பக்தர்கள் அந்தக் கிணற்றில் நீராடி. கங்கையில் ஸ்னானம் செய்த பலனைப் பெருகிறார்கள்.

இத்தகைய ஞானமும் பக்தியும் ஒருங்கே பொருந்திய ஸ்ரீ அய்யாவாளின் அருளிச்செயல்களில் ஒன்று ஆக்யாஷஷ்டி என்னும் இந்த நூல். இதில் சிவ நாமத்தின் மஹிமையை அறுபதுசுலோகங்களில் பாடியிருக்கிறார். சிவராத்திரி புண்ய தினத்தில் சிவபக்த சிகாமணியான ஸ்ரீதரவேங்கடேசஅய்யாவாளின் இந்த நூலின் இத்தமிழாக்கத்தைப் படித்து சிவநாம ஜபத்தில் ஈடுபடும் அன்பர்கட்கு ஸகல க்ஷேமங்களையும் சிவ நாமமான தாயும், சிவபெருமானான தந்தையும் அருள் புரிவார்கள் என்பது திண்ணம். சிவம்.

சிவனார் பெருமை

திருச்சிற்றம்பலம்

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன் றும் இல்லாத் தலைமகன்
தன்னையப் பாஎனில் அப்பனு மாய் உளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே.

திருச்சிற்றம்பலம்

—திருமூலர் திருமந்திரம்

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவ ஜயம்

பதிப்புரை

''சிவனெ னுந்துணைச் சீரெழுத்தினை
நுவலு வோர்கதி நொய்தின் எய்துவார்''
(கந்தபுராணம், தக்ஷகாண்டம்)

'சிவ' என்ற இரண்டு எழுத்துக்களின் மஹிமையை வேதம், ஆகமம், புராணம், இதிஹாஸம் முதலியவை ஒரே முகமாகப் போற்றுகின்றன. வைணவர் புராணமான பாகவதத்திலும் சிவநாமத்தின் பெருமை கூறப்பட்டுள்ளது. அத்தகைய சிவநாமத்தினைத் தாயாக உருவகம் செய்து திருவிசநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச அய்யாவாள் என்னும் பெரியார் 60 சுலோகங்கள் கொண்ட 'ஆக்யா ஷஷ்டி' என்ற அரியதொரு நூலினை ஸம்ஸ்க்ருத மொழியில் இயற்றினார். அந்த நூலின் தமிழாக்கமே இப்பொழுது 'சிவநாம மஹிமை என்ற நூலாக வெளியிடப்படுகிறது.

'சிவ' நாமத்தால் மேன்மைபெற்ற இந்த நூல் மஹா சிவராத்திரி வெளியீடாக வருவதால் மேலும் சிறப்படைகிறது. இத்தகைய சிறப்பும் அருளும் கூடிய சிவ நூல்களை வெளியிட்டுச் சிவபக்தி, சிவநாமபக்தி, சிவனடியார்பக்தி ஆகியவற்றை வளர்ப்பது பெரியதொரு சிவபுண்ணியம் ஆகும். ஸ்ரீ சத்யசாய் கிராபிக்ஸ் திரு. திலீபன் என்ற சிவபக்தர் இந்த நூலைப் பிரசுரித்து மஹத்தான சிவபுண்ணியத்தைப் பெறுகின்றார். திரு. திலீபன் அவர்களும் அவரைச் சார்ந்த அனைவரும் சிவபிரானருளால் நீடூழி வாழ்ந்து மேலும் மேலும் சிவ புண்ணியத்தைச் சேர்த்துக்கொள்ளுமாறு பிரார்த்திக்கின்றேன். அடியேனது வேண்டுகோளை ஏற்று அரியதொரு ஆசியுரை வழங்கியருளிய ஸ்ரீ ஓம் முருகா ஸ்வாமிகளுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். சிவபெருமான் கிருபைபுரிவார்

சென்னை-33 — ஆங்கீரஸ சர்மா

17-2-1997 — சிவம் — பதிப்பாசிரியர்

சிவமயம்

ஸ்ரீமஹாதேவ் ஜயம்

பதிப்புரை

"சிவனெ னுந்துணைச் சீரெழுத்தினை
நுவலு வோர்கதி நொய்தின் எய்துவார்"
(கந்தபுராணம், தக்ஷகாண்டம்)

'சிவ' என்ற இரண்டு எழுத்துக்களின் மஹிமையை வேதம், ஆகமம், புராணம், இதிஹாஸம் முதலியவை ஒரே முகமாகப் போற்றுகின்றன. வைணவர் புராணமான பாகவதத்திலும் சிவநாமத்தின் பெருமை கூறப்பட்டுள்ளது. அத்தகைய சிவநாமத்தினைத் தாயாக உருவகம் செய்து திருவிசநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச அய்யாவாள் என்னும் பெரியார் 60 சுலோகங்கள் கொண்ட 'ஆர்யா ஷஷ்டி' என்ற அரியதொரு நூலினை ஸம்ஸ்க்ருத மொழியில் இயற்றினார். அந்த நூலின் தமிழாக்கமே இப்பொழுது 'சிவநாம மஹிமை என்ற நூலாக வெளியிடப்படுகிறது.

'சிவ' நாமத்தால் மேன்மைபெற்ற இந்த நூல் மஹா சிவராத்திரி வெளியீடாக வருவதால் மேலும் சிறப்படைகிறது. இத்தகைய சிறப்பும் அருளும் கூடிய சிவ நூல்களை வெளியிட்டுச் சிவபக்தி, சிவநாமபக்தி, சிவனடியார்பக்தி ஆகியவற்றை வளர்ப்பது பெரியதொரு சிவபுண்ணியம் ஆகும். ஸ்ரீ சத்யசாய் கிராபிக்ஸ் திரு. திலீபன் என்ற சிவபக்தர் இந்த நூலைப் பிரசுரித்து மஹத்தான சிவபுண்ணியத்தைப் பெறுகின்றார். திரு. திலீபன் அவர்களும் அவரைச் சார்ந்த அனைவரும் சிவபிரானருளால் நீடூழி வாழ்ந்து மேலும் மேலும் சிவ புண்ணியத்தைச் சேர்த்துக்கொள்ளுமாறு பிரார்த்திக்கின்றேன். அடியேனது வேண்டுகோளை ஏற்று அரியதொரு ஆசியுரை வழங்கியருளிய ஸ்ரீ ஓம் முருகா ஸ்வாமிகளுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். சிவபெருமான் கிருபைபுரிவார் -

சென்னை-33 — ஆங்கீரஸ சர்மா

17-2-1997 — சிவம் — பதிப்பாசிரியர்

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவ ஜயம்

சிவநாம மஹிமை

திருவிசநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச அய்யாவாள்
அருளிய "ஆக்யா ஷஷ்டி" யின் தமிழாக்கம்
"சங்கரனடிமை" எழுதியது

1. பரமமங்களமாயும் காரணமில்லாமலேயே காட்டும் கருணையின் இருப்பிடமுமான சிவபெருமானையும் , தன்னை உச்சரிப்பவரின் துன்பத்தைப்போக்குவதும் சௌக்யத்தை உண்டு பண்ணுவதுமான சிவபெருமானது நாமத்தையும் வணங்குகின்றேன்.

(விளக்கம்) என்றும் அழிவின்றி நித்யமாயும் தன்னை வழிபடுபவர்க்கெல்லாம் மங்களத்தை அளிப்பவனாயும் உள்ள முழுமுதற்கடவுள் சிவபெருமான். அவருடைய கருணை பாபிகளையும்கரையேற்றுகிறது அதுவேநிர்வ்யாஜ கருணை எனப்படுகிறது. அத்தகைய சிறப்புமிக்க சிவ பெருமானுடைய திருநாமம் தன்னை உச்சரிப்பாரின் துன்பத்தைப் போக்கி துயரக்கலப்பே இல்லாததும் என்றும் நித்யமானதுமான பரம சுகத்தைக் கொடுக்கக் கூடியது. அத்தகைய சிவநாமத்தின் பெருமையை அறுபது சுலோகங்களால் பாடப் புகுந்த ஸ்ரீதர அய்யாவாள் முதலில் சிவ பெருமானுக்கும் அவருடைய திருநாமத்துக்கும் வணக்கம் செலுத்துகின்றார்.

2. சிவநாமாவே! ஹே தாயே! நான் சிவபெருமானையோ அன்றி வேறு தெய்வங்களையோ அறியேன். சிவன் முதலிய தெய்வங்கள் எங்கே? நான் எங்கே? ஆனால் என்னுடைய நல்ல காலத்தினால் என்னுடைய ஸகல துன்பங்களையும் அகற்றுவதும் இவ்வுலகில் ஊமையில்லாத ஒவ்வொருவருக்கும் எளிதில் அடையத்தக்கதும் தன்னை அடைந்தவர்க்கு ஸகல உலகத்தின் செல்வங்களையும் உரிமையாக்குவதுமான உன்னை நான் காண்கின்றேன்.

(வி-ம்) ஸம்ஸ்க்ருத மொழியில் மூலம் அமைந்த இந்த ஸ்தோத்ரத்திற்கு ஆக்யா ஷஷ்டி அதாவது "ஆக்யாவைப் பற்றிய அறுபது சுலோகங்கள்" என்பது பெயர். ஸம்ஸ்க்ருத மொழியில் "ஆக்யா" என்பது பெண்பால் பெயராகும். துன்பப்படும்பொழுதும் தனக்கு ஒன்று தேவை என்ற பொழுதும் குழந்தை தாயையே அணுகும். இங்கு 'ஆக்யா' என்ற பதம் பெண்பால் பெயர்ச்சொல் ஆதலால் சிவ நாமத்தினை அதாவது சிவ ஆக்யையைப் பெண்பாலாகக் கருணையின் உருவான அன்னையாகக் கவி அழைக்கிறார். சிவபெருமானின் வழிபாடு மிகவும் சிரமப்பட்டு பலவிதி அனுஷ்டானங்களால் செய்யப்படுகிறது. ஆனால் சிவ நாம உச்சாரணம் ஊமையில்லாத ஒவ்வொருவரும் செய்யக் கூடியது. பயன் அளிப்பதில் மிகவும் பெரியது.

3. கலிகாலமானது தன்னுடைய வெள்ளத்தினால் இவ்வுலகனைத்தையும் வியாபித்துக்கொள்ளும் போது வர்ண ஆச்ரமாதி தர்மங்கள் யாவும் மூழ்கி விட்டன. தியானம் முதலிய வழிபாட்டு முறைகளும் மறைந்து விட்டன. இது நன்கு விளங்குகிறது. இந்த நிலையில், ஹே சிவ நாமாவே! இந்த உலகத்தைக் காக்க நீ ஒருத்தி தான் வெற்றியுடன் விளங்குகிறாய்.

(வி-ம்) கலியுகமானது முற்றமுற்ற உலகில் வர்ணாச்ரம தர்ம பேதங்கள் மறைந்து அவற்றுக்குரிய கர்மானுஷ்

டானம், தியானம் முதலிய வழிபாட்டு முறைகளும் க்ஷீணித்து விடுகின்றன. அத்தகைய க்ஷீணமான காலத்தில் ஜனங்களை உஜ்ஜீவிக்கச் செய்யும் எளிதான உபாயம் சிவ நாமத்தை உச்சரித்தலாகும் என்பதை இந்த சுலோகத்தில் ஸ்ரீ அய்யாவாள் விளக்குகிறார்.

4. ஹே சிவநாமமே! உன்னுடைய 'சிவ' என்ற பதத்திஞல் உண்டாகும் பொருள் முப்புரமெரி செய்த சிவ பெருமானுக இருக்கட்டும்; அல்லது முரனை அழித்த திருமாலாக இருக்கட்டும். அப்படிப்பட்ட தெய்வம் ஸகல உலகத்திற்கும் ஈச்வரனுக ஆகட்டும். அல்லது அந்தத் தெய்வத்தைச் சரணடைந்தவர்களை சந்தோஷமாய்க் காப்பாற்றட்டும். நான் அந்தத் தெய்வத்தின் வழிபாடுகளுக்குத் தகுதியற்றவன். மேலும் அது எனக்கு தெய்வமாகவும் வேண்டாம். (ஏனெனில்,) ஹே மங்களமான சிவநாமமே நான் உன்னைச் சரணடைந்திருக்கின்றேன். உன்னிடமிருந்து எனக்கு என்ன நன்மை ஏற்படுகிறதோ அதுவே எனக்குப் போதும்.

(வி-ம்) சிவபெருமான், திருமால் இவர்களுடைய மூர்த்தி வழிபாடுகளை ஆரம்பித்தால் அதற்கென ஏற்பட்ட விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அதற்கு நான் அருகனல்லன். நாமத்தை உச்சரித்தல் என்ற ஒரே வழிபாடு எனக்குப் போதும் என்று ஸ்ரீ அய்யாவாள் சிவநாமம் ஒன்றினையே பற்றுக் கோடாகக் கூறுகின்றார்.

5. ஹே மஹேசனின் நாமமே! உன்னை நாடுபவர்க்கு பிரம்ம விஷ்ணு ருத்ரர்களை அவர்கள் சொன்னதைச் செய்பவர்களாக ஆக்குவதற்கும், மூவுலகத்தின் ஆதிபத்யத்தையும் அவர்கள் கண்ணசைப்பில் பெறும்படி செய்வதற்கும் சாமர்த்யம் உள்ளவளாக இருக்கிறாய். ஏனெனில் உன்னுடைய மஹிமையானது வாக்குக்கும் மனதுக்கும் அப்பாற்பட்டதாகும்.

(வி-ம்) சிவ நாம பஜனம் என்னும் சாதனம் மிகவும் எளியது. ஆனால் அதனால் பெறும் பயனோவென்றால் மிகவும் பெரியது. சிவநாமத்தின் மஹிமை அதனையுடைய சிவபெருமானது மஹிமையைப் போலவே அவாங்மனோ கோசரமாக இருக்கிறது.

6. இளமதி தரித்த இறைவன் கொடிய ஆலஹால விஷத்தினின்றும் அனைத்துலகத்தையும் காத்ததும், தப்ப முடியாத மரணத்தின் பிடியிலிருந்து (யமனிடமிருந்து) மார்க்கண்டேயனைக் காப்பாற்றியதும் முதலிய இக்காத்தல் செயல்கள், ஹே சிவ நாமாவே! உன்னுடைய செயல்கள் அல்லவா! ஏனெனில் அவ்வாறு காக்கப்படுதற்குரிய தகுதியை பக்தர்கள் அடைந்தது உன்னைத் தங்கள் நாவில் வைத்து ஸேவித்ததனாலேயே யாகும்.

(வி-ம்) சிவபெருமானுடைய திருவருளுக்குப் பாத்திரமானவர்கள் அப்பெருமானால் காக்கப்படுகிறார்கள். சிவ பெருமானின் திரு நாமத்தைச் சொல்லியே அவர்கள் அவ்வருளுக்குப் பாத்திரமானார்கள். ஆகையால் சிவபெருமானின் திருவருட் செயல்கள் எல்லாம் சிவ நாமத்தை உச்சரித்ததனாலேயேயாகும் என்பது தெளிவாக்கப்படுகிறது.

7. வேதங்கள் நூற்றுக்கணக்காகவும் இருக்கட்டும் அதைப் போலவே புராண ஆகமங்களும் நூற்றுக் கணக்காக இருக்கட்டும். நீ இல்லாமல் அவைகள் எல்லாத் துன்பங்களையும் போக்குகின்ற சிவபெருமானைப் பற்றிய சிந்தனையை உண்டாக்கப் போதுமானவைகளோ? (இல்லை என்பது கருத்து). ஹே தாயே! சிவ நாமாவே! அத்தகைய சிவ சிந்தனையை எந்த விதமான சிரமமும் இல்லாமலும் வேறொரு தகுதியை வேண்டாமலும் நீ கொடுத்து விடுகிறாய்.

(வி-ம்) வேத புராண ஆகமங்கள் இவற்றை ஓதியுணர்ந்து அருள் பெறுவது என்றால் அதற்குப் பல தகுதி

கள் வேண்டும். சிரமமும் அதிகம். சிவநாமத்தைச் சொல்வதற்கு எவ்விதமான முயற்சியும் தகுதியும் தேவையில்லை. இதனால் சாதனத்தின் எளிமை மட்டுமல்லாமல் சாதனத்தின் இன்றியமையாமையும் விளக்கப்படுகிறது. ஏனெனில் ஆயிரம் சாத்திரங்கள் ஓதினும் சிவபெருமானைப் பற்றிய சிந்தனை ஏற்படாமல் உண்மையான சுகம் ஏற்படாது. அச்சிந்தனையைத் தரவல்லது சிவநாமம் ஒன்றேயாகும்.

8. முப்புரத்து அசுரர்கள் முதலியோர்களை அழித்த முக்கண்ணனாகிய பெருமானுக்கு சிரமம் எவ்வளவு? இராவணாதிகளை அழிக்கத் திருமாலுக்கு ஏற்பட்ட கஷ்டம் எவ்வளவு? தாயான சிவநாமாவே! எல்லா அசுரர்களையும் மற்றும் ஸகல உலகத்தையும் ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் அவித்யையை சிறிதுகூட சிரமம் இல்லாமல் நீ அழித்து விடுகிறாய்.

(வி-ம்) அசுரத் தன்மைக்குக் காரணம் அவித்யை அல்லது அஞ்ஞானமேயாகும். மிகவும் சிரமப்பட்டு சிவ விஷ்ணுக்கள் செய்த காரியத்தை அதன் மூல காரணமான அவித்யையை அழிப்பதால் சிவநாமமானது சுலபமாகச் செய்து விடுகிறது. இதன் கருத்து என்னவென்றால் சிவ நாம பஜனம் செய்பவர்க்கு அசுரத் தன்மை ஏற்படாது என்பதாகும்.

9. ஹே சிவபெருமானின் திருநாமமே! நீ எழுந்தருளும் மார்க்கங்கள் எல்லாப் புறங்களிலும் இந்திரன் முதலான தெய்வங்களின் செல்வங்களாலும் அம்ருத வர்ஷத்தாலும் நனைக்கப்பட்டனவாயும் புஷ்பங்களால் நிரப்பப்பட்டனவாயும் இருக்கின்றன. ஆகையால் நீ பவனி வருவாயாக. உனக்கு முக்தி என்ற லக்ஷ்மியால் கைலாகு கொடுக்கப்படுகிறது.

(வி-ம்) திருவீதியில் பவனிவரும் தேவியாக சிவ நாமா இங்கு வர்ணிக்கப் படுகிறது. அந்தத் தேவியான

வள் எழுந்தருளும் பாதைகள் எல்லாம் மிகவும் அலங்கரிக்கப்பட்டும் அம்ருதமாகிய நீர் தெளிக்கப்பட்டும் தெய்வ லோகத்து மலர்களால் தூவப்பட்டும் இருக்கின்றன. பணிவுள்ள ஒரு ஸகியைப் போல முக்தியானவள் அந்தத் தேவியைக் கைலாகு கொடுத்து எழுந்தருளச் செய்கிறாள். இதனுடைய தாத்பர்யம் என்னவெனில் சிவநாமத்தை உச்சரிப்பவர்க்கு முக்தி நிச்சயம் என்பதாகும்.

10 ஹே சிவ நாமமே! உன்னைத் தன் நாவில் தாங்கும் எல்லோரையும் (உச்சரிக்கும் அனைவரையும்) ஸரத் காலத்திலே பிரகாசிக்கும் பூரண சந்திரனின் காந்தியுடையவர்களாகவும் கருமையான கழுத்தினை உடையவர்களாகவும் மூன்று கண்களையுடையவர்களாகவும் சந்திரனால் பிரகாசிக்கும் தலையை உடையவர்களாகவும் நீ மாற்றி விடுகிறாய். ஆஹா! ஜீவர்கள் சிவத்தன்மையை அடைவதில் உள்ள சிரமத்தைப் போக்குவதில் உனக்குத் தான் எவ்வளவு தீவிரம்!

(வி-ம்) சிவநாம பஜனத்தினால் சிவ சாருப்யம் அதாவது சிவனாகவே ஆதல்) நிச்சயமாகக் கிடைக்கிறது என்பது தாத்பர்யம்.

11 ஹே தேவியான சிவநாமாவே! உன்னைச்சொல்லுகிறபக்தருடைய கடைக்கண் பார்வையானது எந்தெந்த திக்கில் விழுகின்றதோ அந்தந்த திக்கிலிருந்து நெற்றியிலே கண்ணுள்ளவர்களும் பிறைச்சந்திரனைத் தலையிலே தரித்தவர்களும் சரத் காலத்துச் சந்திரனைப் போன்ற வெண்மை நிறமுள்ள மேனியையுடையவர்களுமான பரமேச்வரர்கள் பார்வதி தேவிகளுடன் கூடியவர்களாய் நூற்றுக்கணக்காய் உதிக்கிறார்கள். இது ஆச்சர்யம்.

(வி-ம்) சிவ நாமமானது தன்னைச் சொல்லுபவர்களை சிவ சாருப்யம் அடையச் செய்கிறது என்பது மட்டுமல்லாமல் அவர்களுடைய கடாக்ஷம் ஏற்பட்டவர்களும் அத்த

கைய சிவ சாருப்யம் பெறச் செய்கிறது. அதாவது சிவ நாம பஜனம் செய்பவன், தான் சிவனுக ஆவது மட்டுமல்லாமல் தன் பார்வையினாலேயே பிறருக்கும் சிவசாருப்யம் கொடுக்கவல்லவன் என்பது தாத்பர்யம்.

12. ஹே சிவ நாமமே! கோபத்தினால் கலங்கின மனதுடையவராய் சிவ பெருமான் மன்மதனை எரித்தார். உன்னைப் பின்பற்றும் பக்தர்களாலோ என்றால் காமம் மட்டுமல்லாமல் கோபமும் ஜெயிக்கப்படுகிறது. மேலும் அச்சிவ பெருமான் ஒரு மார்க்கண்டேயனையே யமபயத்தினின்றும் காப்பாற்றினார். ஆனால் உன்னுடைய பக்தர்களோ தங்களுடைய பார்வையினாலேயே அனைவரையும் யமபயத்தினின்றும் காக்கிறார்கள். எனவே இவ்வுலகில் உன்னுடைய பக்தர்கள் வெற்றியுடன் விளங்குகிறார்கள்.

(வி-ம்) சிவபெருமானைவிட சிவநாமத்தைச் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது.

13. ஹே சிவநாமமே! சந்திரன் போல இருக்கிறது என்று பொருள்படுகின்ற 'சசிவத்', சமுத்திரக் கரையில் வசிக்கின்றான் என்று பொருள்படுகிற 'உபவாராசி வஸதி', போன்ற பேச்சுக்களிலும் கூட உன்னுடைய பெயரை உச்சரிப்பது போல் தோன்றும் 'சிவ' என்ற எழுத்துக்களை நாவினால் சொல்லும் ஒருவனுடைய பாததூளியை பிரம்மாதி தேவர்கள் தலையால் வஹிக்கிறார்கள். அங்ஙனமிருக்க, ஹே தாயே! உன்னிடத்திலேயே நிலை பெற்றிருக்கின்ற பக்தர்கள் வெற்றியுடன் விளங்குகிறார்கள் என்பதில் என்ன ஆச்சர்யம் இருக்கிறது?

(வி-ம்) முந்தின சுலோகத்தில் சிவநாமத்தை உச்சரிப்பவர்கள் வெற்றியுடன் விளங்குகிறார்கள் என்று கூறின ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் இங்கு அதற்குரிய காரணத்தைத் தெரியப் படுத்துகிறார். ஸாதாரணமாக பேசிக்கொண்டே இருக்கும்போது ஏற்படுகின்ற பேச்சுக்களின் மத்தியில

'சிவ' என்ற சொல் தற்செயலாக அமைந்து விட்டாலும் அப்படி உச்சரித்ததையே சிவநாமத்தை உச்சரித்ததாகக் கொண்டு அவனை பிரம்மாதி தேவர்கள் சேவிக்கிறார்கள் என்றால் சிவநாம ஜபத்திலேயே நிலைத்திருப்பவர்களின் பெருமையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ என்பது தாத்பர்யம். (சசிவத் என்பதிலும், உபவாராசிவஸதி என்பதிலும் சிவ என்ற பெயர் தானாக அமைவதைக் காண்க.)

14. ஹே சிவநாமமே! நீயோ வென்றால்உன்னை ஆச்ரயித்தவருக்கு நன்மையைக் கொடுக்கிறவள் என்று பிரஸித்தியாய் இருக்கிறாய். அந்தோ! நாவினுல் நீ தொடப்பட்ட மாத்திரத்தில் (உச்சரித்த மாத்திரத்தில்) அங்ஙனம் உன்னை உச்சரிப்பவனுடைய கழுத்து விஷத்தால் சூழப்பட்டதாக ஆகிறது. கையும் நெருப்பினால் அணைந்து கொள்ளப்பட்டதாக ஆகிறது. மற்ற அங்கங்களெல்லாம் பாம்பினால் வியாபிக்கப்பட்டனவாய் ஆகின்றன.

(வி-ம்) சிவநாம ஜபம் செய்பவர் சிவ ஸாரூப்யம் என்ற பெரும் நன்மையை அடைகிறார் என்ற விஷயத்தை இங்கு ஸ்ரீ அய்யாவாள் அலங்காரமாகக் கூறுகிறார். சிவ நாமம் பக்தருக்கு நன்மையைச் செய்யும் என்பது ப்ரஸித்தமாய் இருக்க அதை உச்சரிப்பவனுக்கு கழுத்தில் விஷமும், கையில் தீயும் உடலில் பாம்பும் ஏற்படுகிறதே என்று ஸமத்காரமாக விரோதமாகக் கூறுவது போல் கூறி உண்மையில் அவன் சிவ ஸாரூப்யம் என்ற நன்மையையே பெறுகிறான் என்பதை அய்யாவாள் இங்கு கூறுகிறார்.

15. ஒருவனுடைய வலிமையெல்லாம் முறிந்து புலன்களெல்லாம் குன்றிப்போய் இருக்கக் கூடிய கடைசி நிலையில் ஹே சிவநாமமே! அவனுடைய நாவையாவது காதினையாவது அடைந்த நீ ஒருத்தியல்லவோ அவனுடைய மகத்தான க்ஷேமத்தின் பொருட்டு உத்தரவாதம் கொடுப்பவளாய்

இருக்கிறாய். அத்தகைய நிலையில் வேறு எவரிடமிருந்து உதவியின் ஒரு துளியாவது கிடைக்கும்? (வேறு எவரிடமிருந்தும் கிடைக்காது என்று பொருள்)

(வி-ம்) சரீரபலம், இந்த்ரிய பலம் முதலிய யாவற்றையும் இழந்து கடைசியான மரணாவஸ்தையிலிருக்கும் ஒருத்தனுக்கு எந்த விதமான உதவியும் எவரிடமிருந்தும் ஏற்படுவதற்கில்லை நாவினால் சிவநாமம் உச்சரித்தாலோ அங்ஙனம் உச்சரிக்க சக்தியற்றவனாயிருந்தால் பிறர் உச்சரிக்கக் காதினால் கேட்டாலோ அந்த சிவநாமம் ஒன்றே இவனுக்குப் பெருத்த க்ஷேமமாகிய மோக்ஷத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது.

16. ஹே சிவநாமாவே! இவ்வுலகில் புலன்களால் ஏற்படுகிற இன்பங்கள் என்கிற காட்டுத் தீயினால் ஒரு பொழுதும் தீண்டப்படாதவராய் சில புண்யசாலிகள் மோதுகின்ற அலைகளோடு கூடியதும் அம்ருதப் பெருக்கோடு கூடியதும் மிகவும் குளிர்ந்ததுமான உன்னை இடைவிடாது உச்சரித்தலாகிய பிரவாஹத்தில் தங்கள் இஷ்டம் போல் விளையாடுகிறார்கள்.

(வி-ம்) உலக வாழ்க்கையில் இன்பங்கள் எனக் கருதுபவையெல்லாம் உண்மையில் காட்டுத் தீக்கு ஒப்பானவையாகும். சிவநாமாவை இடையறாது ஓதுதல் என்பது பிரவாஹம் மிகுந்த குளிர்ந்த அம்ருத நதி போன்றது. புண்யசாலிகளே அதில் மூழ்கி இன்புற்றிருக்கக் கூடியவர்கள் என்பது கருத்து. "சிவ சிவ என்கிலர் தீவினையாளர்" என்னும் திருமூலர் வாக்கையும் ஒப்பு நோக்குக.

17. ஹே சிவநாமாவே! இடைவிடாது உன்னை உச்சரித்துக் கொண்டே இருப்பது என்ற அலைகளில் இடையூறில்லாமல் விளையாடுவதில் விருப்பம் கொண்ட சில பாக்கியசாலிகள் தங்களுடைய பற்றைவிடாமைக்குறையும்

செல்வங்களையும் வணக்கத்துடன் கூடிய சிற்றரசர் கூழாங்களின் முடியில் அணிந்த மணிகளின் ஒளிகளால் வியாபிக்கப்பட்ட திக்குகளோடு கூடிய அரச செல்வத்தையும் கூடத் துறந்து விடுகிறார்கள்.

(வி-ம்) சிவநாம ஜபத்தின் ருசியை அனுபவித்தவர்கள் வேறு எத்தகைய செல்வத்தையும் ஏன் ராஜபோகத்தையும் கூட உயர்ந்ததாகக் கருத மாட்டார்கள்.

18. முப்புரமெரித்த பரமசிவனின் திருநாமமே! சிவானுபவமாகிற அலைமோதும் இன்பத்திற்கு எதிராக உள்ள எல்லாத் தடைகளையும் தொலைத்து யானைகள் போன்ற அவைகளை ஒழிப்பதில் சிங்கங்கள் போன்றவைகளான உனது உச்சாரணமாகிற வெள்ளப் பெருக்குகள் என்னை மூச்சுவிடக்கூட முடியாதவனாய் செய்பவைகளாய் எப்பொழுது ஆக்ரமித்துக் கொள்ளும்?

(வி-ம்) சிவானுபவம் என்பது ஸதா சிவசிந்தனையில் ஈடுபட்டிருப்பதாகும். இச்சிவசிந்தனைக்கு இடையூறுகள் ஏற்படுமானால் அவற்றை அகற்ற சிவநாம உச்சாரணமே சிறந்த உபாயம். ஒவ்வொருவருக்கும் மூச்சு விடுவது என்பது எப்படி இயல்பாய் இடைவிடாமல் நடைபெறுகிறதோ அப்படி, ஏன் அதற்கு மேலேயும் கூட சிவநாம உச்சாரணமானது நம்மைவ்யாபித்துக் கொள்ளவேண்டும்.

19. ஹே சிவ நாமாவே! அசக்தி, சோம்பல், ஒன்றிலும் பற்றின்றி இருப்பது, பிணி, துயரம் முதலிய இடையூறுகள் உன்னை இடைவிடாது ஓதுதல் என்ற வெள்ளத்தில் என்னுடைய விளையாட்டை பாதிக்க வேண்டாம். இவைகள் மற்ற எல்லாவற்றையும் நன்றாய் பாதிக்கட்டும். என்னுடைய வணக்கங்கள் உனக்கு உரித்தாகட்டும். என்னுடைய இந்த விருப்பத்தை நிறைவேற்றுவாயாக

(வி-ம்) அசதி, சோம்பல், பிணி, துன்பம் முதலிய இடையூறுகளால், மற்ற காரியங்களெல்லாம் தடைப்பட்டுப்

போனாலும் போகட்டும். நாவினால் சிவநாம ஜபத்தைச் சொல்லுவது மாத்திரம் தடைபடக்கூடாது. அத்தகைய அருளைக் கவி வேண்டுகிறார்.

20. ஹே தாயே! மன்மதனை எரித்தசிவபெருமானின் திருநாமமே! வேறு சொல்ல என்ன உளது? உன்னுடைய அம்ருத ரஸத்தை அனுபவிப்பதில் ருசி கொண்டவர்கள் இவ்வுலகத்தில் இந்திர பதவியையும், ஏன் பிரம்ம பதவியையும் கூட ஒரு துரும்புக்குச் சமானமாகக் கூட மதிப்பதில்லை. அது மட்டுமா? அத்தகைய பதவிகளை நெருப்பைக் கண்டு ஓடுவதைப்போல விட்டு விலகுகிறார்கள்.

(வி-ம்) சிவ நாம ஜபத்தின் மூலம் கிடைப்பது சிவானந்தம். இதுவே தனக்கு மேற்பட்டதும் ஸமானமானதுமில்லாத முடிவில்லாத பேரின்பம். மற்ற பிரம்மாதி பதவிகளால் கிடைக்கும் சுகங்கள் முடிவு உள்ளவையும் துக்ககரமாய் முடிவனவாயும் உள்ள கீழ்த்தரமான இன்பங்களேயாகும். "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு......" என்ற மணிவாசகர் கருத்தையும் இங்கு ஒப்பு நோக்குக.

21. ஹே சிவநாமாவே! உன்னைச்சரணடைந்தவர்கள் ஸ்வர்க்கத்தைப் பூமியாகவும், பூமியை ஸ்வர்க்கமாகவும் இந்த ப்ரபஞ்சத்தை இந்திரனில்லாமலும் அல்லது வேறொரு இந்திரனைக் கொண்டதாகவாவது, பிரம்மனே இல்லாமலாவது அல்லது வேறொரு பிரம்மனைக் கொண்டதாகவாவது செய்யச் சக்தி உள்ளவர்கள். அங்ஙனமிருந்தும் தங்களுடைய ஸ்வபாவமான சாந்தத்தினால் இவர்கள் இம்மாதிரியான காரியங்களில் அலக்ஷ்யமாய் இருக்கிறார்கள்.

(வி-ம்) நாம உச்சாரணம் செய்து, அதன் மூலம் இறையருள் பெற்ற பக்தர்கள் அவ்விறைவனைப் போலவே ஆக்கவும் அழிக்கவும் வல்லவர்கள். இருப்பினும் அவர்களுக்கு இவ்விதிசயங்களைக் கையாண்டு ஆவது ஒன்றுமில்லை. மனச்சாந்தியையே பெரிதாக விரும்புவார்கள்.

22, ஹே ஈசனின் நாமமே! உன்னுடைய அம்ருத ரஸத்தினுடைய பெரிய மழையால் கலி என்கிற பெரிய கொழுந்து விட்டு எரிகிற நெருப்பை அணைப்பதால் இவ்வுலகைக் குளிர்ச்சியாகச் செய்வதாயும், சிறந்த பலத்தை அளிப்பதாயும் எல்லாத் திக்குகளிலும் உள்ள அடர்ந்த இருளைப் போக்குகின்றனவாயும் இவ்வுலகிற்கே அலங்காரமாயும் உள்ள அற்புத மேகங்கள் பிரகாசிக்கின்றன.

(வி.ம்) சிவநாமத்தை ஜபம் செய்யும் பக்தர்கள் மேகங்களாக உருவகிக்கப் படுகிறார்கள். மேகங்களால் மழை பெய்து நல்ல பயிர் செழிக்கிறது. பக்தர்களாகிய மேகங்கள் பெய்வது சிவநாமமாகிய மழை. இந்த மழையினால் துன்பமாகிற தீ அணைகிறது. சிவ ஸாயுஜ்யம் போன்ற சிறந்த பயன் ஏற்படுகிறது. ஸாதாரண மேகத்திற்கும் சிவநாம பக்தர்களாகிற மேகங்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. அதாவது ஸாதாரண மேகங்கள் இருளை உண்டாக்கும். சிவநாம பக்தர்களாகிற மேகங்கள் அஞ்ஞானமென்கிற இருள் மூட்டத்தை அகற்றும். மேலும் இந்த பக்தர்களால் உலகத்திற்கே ஒரு பெருமையும் உண்டாகிறது.

23. ஹே சிவநாமமே! இரண்டற்றதான உன் இரண்டெழுத்துக்களாகிற ஒரே தத்துவத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் பிரம்மாதி தேவர்களுக்கும் கிடைத்தற்கரியதான மேலான ஆனந்தத்தால் நிறைந்தவர்களாக இருந்து கொண்டு பிரியமானவை கிடைப்பதில் மகிழ்ச்சியையோ அல்லது பிரியமற்றவை கிடைப்பதில் துன்பத்தையோ பிறரொருவரிடமிருந்து பயத்தையோ அப்படியே தாம் ஒருவருக்கும் பயம் உண்டு பண்ணுகிற தன்மையையோ அடைகிறதில்லை.

(வி-ம்) வேறோரு விஷயத்தில் பற்றுதல் இன்றி சிவநாம ஜபம் ஒன்றிலேயே லயித்தவர்களுக்கு ப்ரம்மாதிகளுக்

கும் கிட்டாத பேரின்பம் ஏற்படுவதால் அவர்கள் இவ்வுலகில் பெறவேண்டியது வேறொன்றுமில்லை, அவர்கள் விருப்பு வெறுப்பு அற்றவர்கள். அவர்களுக்கு எவரிடமிருந்தும் பயமில்லை. அதேபோல் இவர்களிடமிருந்தும் எவரும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. பிறரை இவர் துன்புறுத்தற்குரிய காரணம் எதுவும் இல்லை என்றபடி.

24. காமனை எரித்தபெருமானின் திருநாமமே! உலகில் எவனொருவன் என்னை நாவிலாவது அல்லது செவியிலாவது வைத்துக் கொள்கிறானோ அவனுடைய திசையைக் கூட இந்திரன் முதலான திக்பாலகர்களோ அல்லது பிரம்ம தேவனோ கொடுமையான பார்வையால் பார்ப்பதற்கு ஸாமர்த்யம் உள்ளவர்கள் ஆவார்களோ என்று உன்னுடைய நாம பஜனத்தின் பேரொலியின் காரணமாய் அடிக்கடி நீ கர்ஜனை செய்து கொண்டிருக்கிறாய்.

(வி-ம்) சிவநாம பஜனம் செய்பவர்களை பிரம்மாதி தேவர்களோ அல்லது இந்திராதி திக்பாலகர்களோ ஒரு தீங்கும் செய்ய முடியாது என்பது கருத்து.

25. மலர்க்கணையோனான மன்மதனை எரித்தஎம்பெருமானின் திருநாமமே! பக்தர்களான இவர்கள் தங்களுடைய நாக்குகளாகிற இடத்தில் என்னை நிச்சயமாகப் பிணித்து விடுகிறார்கள் என்று பயத்தினால் போல நீ துரும்பை மேரு பர்வதமாகவும், மேரு மலையைத் துரும்பாகவும் மாற்றுவோமென்று இந்த பக்தர்களுடைய விளையாட்டாகப் பேசும் பேச்சுக்களைக் கூட பயன்படச் செய்பவனாய் விளையாடுகிறாய்.

(வி-ம்) சிவநாம பக்தர்களுடைய பேச்சுக்களைத் தன்னுடைய பேச்சாகக் கொண்டு சிவநாமம் நிறைவேற்றி வைக்கிறது. ‘‘எனதுரை தனதுரையாக நீறணிந்து ஏறுகந்து ஏறிய நிமலன்......’’ என்ற திருஞானசம்பந்தர் திருவாக்கும் இங்கு ஒப்பு நோக்கற்குரியது.

26. ஹே தாயே! ஈசானனின் திரு நாமமே! எல்லாவற்றையும் அறவே விட்டு விட்டு உன்னை மட்டுமேவழிபடுகிறவர்களுக்கு எந்த மேலான தெய்வம் அவர்களால் விரும்பப்பட்டதோ அந்தந்த தெய்வங்களின் உருவத்தால் அந்த பக்தர்களின் கண்களையும் அந்தந்த தேவதைகளுக்குரிய வார்த்தைகளால் அந்தபக்தர்களுடைய காதுகளையும் மகிழ்வடையச் செய்து, முடிவற்றதான பேரானந்தத்தை நீ அளிக்கின்றாய் அல்லவா?

(வி-ம்) எல்லா வழிபாடுகளையும் விட்டு விட்டு சிவநாம ஜபம் ஒன்றையே செய்து வரும் அந்த பக்தருக்கு எல்லாத் தெய்வங்களும் பிரத்யக்ஷமாகி எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றி வைக்கும் என்பது தாத்பர்யம்.

27. மலைமகள் மணாளனின் திருநாமமே! தாயே! காமதேனு, கற்பகவ்ருக்ஷம் போன்ற இவ்வுலகில் பிரஸித்தியுள்ள வஸ்துக்கள் உன்னுடைய அடிமைகளுக்கும் அடிமைகளுடைய புருவ அசைவுக்கு வசமானவைகள். அங்ஙனமிருக்க அவைகளை உதார குணத்தில் எவ்வகையில் உனக்கு ஒப்பாக ஒரு மனிதன் சிறிதாவது வெட்கமுள்ளவனாக இருந்தால் சொல்லக் கூடும்?

(வி-ம்) கற்பகவ்ருக்ஷம், காமதேனு போன்றவைகள் நாம் விரும்புவனவற்றைக் கொடுக்கக் கூடியவைகள்என்பது ப்ரஸித்தம், ஆயினும் சிவநாமம் அளிப்பதைக் காட்டிலும் அவைகள் அதிகமாகக் கொடுக்க முடியாது. விரும்பியதை வாரி வழங்குவதில் அவைகள் சிவநாமத்திற்கு ஈடாக மாட்டா.

28. ஈசனின் நாமாவே! உலகத்தை உண்டாக்குவதற்கும் காப்பதற்கும் அழிப்பதற்கும் வல்லவர்களாய் இருந்தும் உன்னுடைய தொண்டர்கள் மனச்சாந்தியடைந்தவர்களாக எதையுமே பொருட்படுத்தாதவர்களாக இருந்து

கொண்டு இல்வுலகத்தினரால் அலக்ஷியப் படுத்தப்படக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இந்த சிலர் இவ்வுலகில் உன்னால் மாத்திரமே திருப்தியடைகிறார்கள். ஏனெனில் இவர்கள் உன்னுடைய இன்சுவையை அனுபவித்தவர் களல்லவா?

(வி-ம்) ஒருவர் இவ்வுலகில் பிறரால் கௌரவிக்கப்பட வேண்டுமென்றால் அவர் தன்னுடைய திறமையை வெளிப் படக் காட்டவேண்டும். அங்ஙனமின்றி நீறு பூத்த நெருப்பு போல் இருப்பவரைக் கண்டால் உலகம் உபேக்ஷை செய் யும். சிவநாமத்தின் ருசியில் ஈடுபட்டவர்கள் பாமர உலகத் தின் அலக்ஷ்யத்தைக் கண்டு வருந்தமாட்டார்கள். மேலும் நாமரஸத்திலேயே ஈடுபட்டிருப்பார்கள்.

29. ஹே சிவ நாமம்ம! உன்னுடைய இரண்டு எழுத் துக்கள் அவைகளை அடைந்தவர்களுடைய வாயினில் தர்மம். பிரம்மம் என்ற இவ்விரண்டினைப் பற்றிய அறிவை உண்டு பண்ணும் எழுத்துக் கூட்டங்கள் அனைத்தையும் வைக்கின்றன. பிரம்ம, விஷ்ணுவாதி தேவர்களின் செல்வங் களையெல்லாம் அவர்கள் பாதங்களில் வைக்கின்றன. ஆனால் உன்னுடைய பக்தர்களோ என்றால் உன்னுடைய இரண்டெழுத்துக்களை விட்டு தர்மத்திலோ, கர்மத்திலோ அல்லது பிரம்மாதிகளின் செல்வத்திலோ இன்பம் அடைவ தில்லை. உன்னுடைய இரண்டெழுத்துக்களில் உள்ள இனிமை தான் என்னவோ?

(வி-ம்) சிவநாம ஜபத்தின் ருசியை சுவைத்தவர்கள் வேறு எதையும் இன்பமாகக் கொள்ள மாட்டார்கள். சிவ நாம ஜபம் ஸகலவேதங்களின் அறிவையும், ஸகல செல்வங் களையும் தானாகவே உண்டாக்குகிறது என்பது இங்கு விளக்கப்படுகிறது.

30. ஹே மஹேசனின் நாமாவே! தேவி! நாக்கின் நுனியில் உன்னைத் தொட்ட மாத்திரத்தில் (உச்சரித்த

மாத்திரத்தில்) மனிதர்களுடைய ஸகல பாபங்களையும் ஒழிப்பவளாயும், ஸகல நன்மைகளையும் வாரிவழங்குகிற வளாயும் இருக்கிற உன்னை ஆதாரமாகக் கொண்டே சிவ பெருமானுக்குப் பெருங்கருணையுள்ளவர் என்ற நிலையைக் கூறுகிறார்கள். நீ இல்லாமல் கருணைமிக்கவன் என்ற நிலையை எவரால் நிர்வஹிக்க முடியும் ? நீயே கூறுவாய்.

(வி-ம்) உலகில் மக்களுடைய துன்பத்தைப் போக்கி இன்பத்தை நல்குவது சிவபெருமானின் பெருங்கருணை யாகும். அத்தகைய கருணை நம்மீது அப்பெருமானுக்கு உண்டாவதற்கு நாம் செய்யும் சிவநாம சங்கீர்த்தனமே காரணமாகும்.

31. சிவநாமமே ! முப்புரமெரித்த சிவபெருமானும், கைடபனை சம்ஹரித்த திருமாலும் அவருடைய மற்றொரு மூர்த்தி பேதமான ஸ்ரீ ராமனும் உன்னைத் தமது பெயர் களில் ஒன்றாய் வைத்துக் கொண்டார்கள். அவர்களில் முத லாவதான சிவபெருமானுக்கே உன்னால் அழைக்கப்படும் தன்மை உரியதாக விருக்கின்றது. அச்சிவபெருமானுடைய நற்காரிய பரிபாகம் அம்மாதிரி வெற்றியுடன் விளங்கு கிறது.

(வி-ம்) 'சிவ' என்ற பெயர் விஷ்ணு ஸஹஸ்ர நாமத் திலும் ஸ்ரீ ராம ஸஹஸ்ர நாமத்திலும் இருப்பினும் 'சிவ' என்ற அந்த பரம மங்களமான பெயர் சிவபிரான் ஒரு வருக்கே முழுமையாய் உரியதாகும். ''ஆத்யஸ்ச ஏவ'' என்ற மூலப்படி முதலாவதாகக் கூறப்பட்டவருக்கே என்ற தொடரில் முதலாவதாக என்பது எண்ணிக்கையில் முதல மவர் என்பதுடன் அல்லாமல் மூவரிலும் முதல்வர் என்ற மஹிமையைச் சொல்லுவதையும் அறிந்து சிவபக்தர்கள் இன்புறலாம்.

32. மன்மதனை எரித்த சிவபெருமானின் திருநாமமே! இப்பிரபஞ்சம் முழுவதாலும் இடைவிடாது செய்யப்பட்ட

ஸகலமான பாபங்களும் உனக்குத் பரிபூரண திருப்தியைச் செய்து வைக்க போதுமானதாக இருக்காதல்லவா? என்னுடைய பாபங்களால் அந்தத்திருப்தியைச் செய்து வைக்க நான் முயற்சி செய்கிறேன். என்னுடைய அந்த இப்பாபம் உன்னால் பொறுத்துக் கொள்ளப்பட வேண்டும். உனக்கு இந்த எனது நமஸ்காரம்.

(வி-ம்) சிவ நாம உச்சாரணமானது எல்லை இல்லாத சிவ புண்ணியத்தைப் பெருக்குவதால் அது எல்லாப் பாபங்களையும் ஒழித்து விடுகிறது. எனவே அதன் முன் நிற்கப் போதுமான பாபம் இவ்வுலகில் எவராலும் செய்ய இயலாது. ஆனைப்பசிக்குச் சோளப் பொரி என்பது போல சிவ நாமத்தின் பசிக்கு ஈடான பாபமாகிற உணவு இம் மூவுலகிலும் இல்லை. அங்ஙனமிருக்க என்னுடைய பாபங்களைக் கொண்டு சிவநாமத்தின் பசியைத் திருப்தி செய்ய முயற்சிக்கும் என்னுடைய இந்தப் பாபத்தையும் பொறுத்துக் கொள்வாய் என அய்யாவாள் வேண்டுகிறார்.

33. புராரியான சிவபெருமானின் திருநாமமே! தாயே! என்னுடைய நாக்கு என்ற பீடத்தில் உன்னை அமர்த்தி வைத்து என்னுடைய பாபத்திரளை உனக்கு ஆஹாரமாக அர்ப்பணம் செய்ய நிச்சயித்த உடனேயே என்ன ஆச்சரியம்! அந்த எண்ணத்தினாலேயே அப் பாபக் குவியல் விழுங்கப்பட்டு விட்டது. நான் இனி உனக்கு எதை அர்ப்பணம் செய்வேன்? ஹே பகவதி! இந்தப் பாபத்தையும் பொறுத்துக்கொள்.

(வி-ம்) பெரும்பசிக்கு ஈடில்லாத உணவாயினும் ஒரு சிறிய உணவு மாதிரியாவது என்னுடைய பாபத்தை வைத்துக்கொள் என்று அர்ப்பணம் செய்ய எண்ணின் மாத்திரத்திலேயே பாபங்கள் யாவும் தீர்ந்துவிட்டன. இனி அளிக்க அச்சிற்றுண்டியும் இல்லாமல் போய் விட்டதே! இந்தப் பாபத்தையும் மன்னிப்பாய் என்று

இங்கு வேண்டப்படுகிறது. இதன் தாத்பர்யம் சிவநாம உச்சாரணம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்ட உடனேயே ஸமஸ்தமான பாபங்களும் நசித்து விடும் என்பதாகும்.

34. கண்ணுதற்கடவுளின் திருநாமமே! எல்லையற்ற தான புண்யங்களைச் செய்தவர்களுடைய நாவினில் வசித்தல் என்பது உனக்கு இயற்கையாக ஏற்பட்டது. அது அங்ஙனமிருக்கட்டும். தாயே! நீ என்னுடைய நாவினில் வந்து தங்காவிடில் மிகப்பெரிய பாபி ஒருவன் காப்பாற்றப் பட்டான் என்ற புகழ் உனக்குக் கிடைக்காதல்லவா?

(வி-ம்) புண்யசாலிகளைக் காப்பது என்பது சிவ நாமத்திற்கு இயற்கையாக அமைந்தது. ஒரு மஹாபாபியின் நாவில் வந்து தங்கி அவனைக் காத்தால் தான் பெரியதொரு கீர்த்தி ஏற்படும். ஆகையினால் நீ என்னுடைய நாவில் வந்து தங்க வேண்டும் என்பது கருத்து.

35. ஹே தாயே! சிவ நாமமே! 'சந்திரனைப் போல என்று பொருள்படும் 'சசிவத்' என்பது முதலான சொற்றொடர்களின் வியாஜத்தினாலேயே அவ்வாறு சொல்பவர்களின் உட்புகுந்து எவ்விதகாரணமுமின்றி மக்களின் சிரம பாரத்தை நீ அழிக்கிறாய் அல்லவா? இங்ஙனம் செய்வதற்குத் திருமாலோ அல்லது சிவபெருமானையுங் கூட ஸமர்த்தர் ஆவார்களோ? அவர்களுடைய வேறு. விதமான மேன்மைகளை நாம் இதனால் மறுக்கவில்லை.

(வி-ம்) முன் 13 ம் ச்லோகத்தில் சொன்னபடி எந்த முறையிலாவது சிவ என்ற எழுத்துக்கள் சேர்ந்து ஒருவர் வாயில் வந்துவிட்டால் தன்னைத் தான் அவன் உச்சரித்து விட்டான் என்று சிவநாமம் அவனைக் காக்கமுன்வருகிறது. ஆனால் உருவ வழிபாடுகள் அத்தன்மைத்தல்ல. திருமாலுக்கோ அல்லது சிவபெருமானுக்கோ உள்ள மற்ற

பெருமைகளையெல்லாம் தான் இதனால் மறுத்து விட்டு தாகக்கொள்ளக்கூடாது என்கிறார் ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள்.

33. ஹே சிவ நாமமே! பார்வதி பரமேச்வரர்களால் கைவிடப்பட்ட நான், "இவன் மிகவும் துராத்மா; தாய் தந்தையர்களால் புறக்கணிக்கப் பட்டவன்" என்று இவ் வுலகத்தினாலும் அப்படியே விடப்பட்டவனல்லவா? அத் தகைய எனக்கு இவ்வுலகில் வேறு கதி இல்லை. ஹே தாயே நீ என்னைக் காத்து ரக்ஷித்தாலும் சரி அல்லது தள்ளி விட்டாலும் சரி, நான் உன் ஒருத்தியையே சரணமடை கின்றேன்.

(வி-ம்) நாம பஜனம் ஒன்றையே தான் கடைப் பிடிப்ப தாக நூலாசிரியர் கூறுகிறார்.

37. ஹே சிவநாமமே! மிகவும் பாபம் புரிந்தவனைக் கைவிடத்தக்கவன் என்று அனைவருமே கூறுகின்றார்கள் ஆனால் அப்பாபியும் உன்னால் ஏற்றுக் கொள்ளத் தக்க வனாக விளங்குகிறான். இக்காரியம் உனக்கு நன்குபொருத்த மானதேயாகும். ஏனெனில், நீ திருப்பாற்கடலிலிருந்து ஆலஹால விஷமும் அம்ருதரஸமும் கிளம்பியதில் முதலாவ தான நஞ்சினை எடுத்துக் கொள்வதில் விருப்பம் காட்டிய பிரபுமணியினை அடைந்தவளாயிற்றே!

(வி-ம்) எல்லோராலும் விடத்தக்க தீயோனையும் ஏற்றுக் கொள்ளுதல் சிவநாமத்துக்கு மிகவும் உசிதமான காரியமாகும். ஏனெனில், அதைத் தலைவனாகக் கொண்ட பெருமானும் எல்லோராலும் கைவிடத்தக்க விஷத்தினைக் கொண்டவரல்லவா? கௌஸ்துப மணியையும் அப்ஸரஸ் கூட்டத்தையும் கண்டு உனக்கு எனக்கு என்று கலகமிட்டுக் கொண்டு கேவலம் ஸ்வர்க்கத்துக்குப் பாரமாக இருக்கும் தேவர்கள் எவ்வளவு பேர் இல்லை? விஷம் வெளி வந்தபோது அந்த தேவதாக் கூட்டங்கள் எல்லாம் ஓடிப் போயின. இந்த உலகம் முழுதும் செயலற்றுப் போயிற்று.

அப்போது 'அஞ்சேல்' என்ற அபய வார்த்தைகளுடன் எவர் முன்வந்தாரோ அந்தப் பெருமானையே நாம் துதிக்கிறோம் என்ற ஸ்ரீநீலகண்ட திக்ஷிதரின் திருவாக்கும் இங்கு நினைவிற்குரியது.

38. ஹே தாயே! சிவநாமாவே! காமக்ரோதாதிகளான உன் பகைவர்கள் எனக்கு எப்பொழுதும் தோஷங்களை விளைவிக்கின்றனவாய் மிகவும் வலிமை பெற்று வருகின்றன. ஈசனும் என்னுடைய கெட்ட நிலையைப் பார்த்துக்கொண்டேயும் என் ஹ்ருதயத்தில் வசிக்கின்றார். இங்ஙனமிருந்தும் என்னுடைய எல்லாப் பாபத்தையும் மறுத்துக் கொண்டு என்னைத் தாங்கிக் கொண்டிருக்கிறாய்! உன்னுடைய வைபவத்தை யாரால் புகழ முடியும்?

(வி-ம்) எல்லோருடைய ஹ்ருதயங்களிலும் ஈசனே இருக்கின்றார் என்ற நியதிப்படி காமக்ரோதாதிகள் வலுத்திருக்கும் எனது ஹ்ருதயத்திலும் அவைகளை அவர் பார்த்துக் கொண்டே ஸாக்ஷியாக இருக்கின்றார். வெளியிலே உள்ளவர்களுக்கு பாபத்தை மறைத்தாலும் ஈசனிடம் மறைக்க முடியாது. அப்படியிருந்தும் எல்லா பாபத்தையும் மறுத்துக்கொண்டு சிவநாமமானது பக்தனைக் காக்கிறது.

39. மன்மதனை எரித்த சிவபெருமானின் திருநாமமே! இவ்வுலகில் ஒருவர் வீட்டு முன்வாசல் திறந்திருக்கும் போதும் செல்வவந்தன் அல்லாத ஒருவனை வேறு வழியின் மூலம் அடைய வேண்டிய இடத்தை எப்படி ஒரு நண்பன் நன்கு அடையச்செய்கிறானோ அதே போல ஸ்வகர்மானுஷ்டானங்களில் சக்தியற்றவனான என்னை நீ, ஹே மங்களத்தைத் தரும் தாயே, சிவபெருமானுடைய ஸ்தானத்தை எவ்விதமான சிரமமுமின்றி உன்னுடைய சொந்தமான வழியால் அடையச் செய்கிறாய் அல்லவா!

(வி-ம்) ஒரு வீடு திறந்திருந்தாலும் அவ்வீட்டில் நுழையத் தகுதி உள்ளவர்களே நுழைய முடியும். ஆனால் அங்கு நமக்கு நண்பனான ஒருவன் கிடைத்து விட்டால் அவன் நம்மைச் சுலபமாக வேறு வழியின் மூலம் உள்ளே அழைத்துச் சென்று விடுவான். உதாரணமாக சில குறிப்பிட்ட கட்டணங்கள் மூலம் தகுதிகள் உள்ளவர்களே ஒரு தேவஸ்தானத்தினுள் நுழைந்து இறைவனை அருகில் நின்று தரிசிக்க முடியும். இருப்பினும் அங்கு நமக்கு வேண்டியவர்கள் பொறுப்பான ஸ்தானங்களில் இருந்தால் சிரமமின்றி அவர்கள் நம்மை எவ்விதக் கட்டணமும் இன்றி வேறு வழியாக உள்ளே அழைத்துச் சென்று விடுகிறார்கள். இதை நாம் ப்ரத்யக்ஷமாகப் பல இடங்களில் பார்க்கிறோம். அதேபோல சிவபெருமானின் சந்நிதானம் எப்பொழுதும் திறந்திருந்தாலும் முன்வாயில் வழியே நேரே நுழையும் தகுதி கர்மானுஷ்டானம் முதலியவைகளால் ஏற்படுவதாகும். ஆனால் சிவ நாமமோவென்றால் அத்தகைய தகுதிகள் இல்லாத நம்மையும் தன்னுடைய பலத்தினால் சிவசந்நிதானத்தில் சேர்த்து விடுகிறது. கர்மானுஷ்டானம் இல்லாதவருக்கும் சிவபதம் கிடைக்க ஒரே வழி நாம சங்கீர்த்தனம் என்பது தாத்பர்யம்.

40. ஹே பகவதி! சிவநாமாவே! கர்மானுஷ்டானங்களை அனுஷ்டிக்க சக்தி உள்ளவனையுங்கூட நீ தான் காப்பாற்றுகிறாய். ஏனென்றால் நீ இல்லாமல் அந்தக் கர்மானுஷ்டானம் செய்தவனுக்கும் அவன் செய்த கர்மாவினால் தகுதி ஏற்படாது. ஆகையால் க்ஷேமமாக இருக்க விரும்பும் ஒவ்வொருவனுக்கும் நீயே உபாஸிக்க வேண்டியவளாய் இருக்கின்றாய். அந்த சிவபெருமானும் கூட உன்னாலேயே தான் தனது ஈச்வர ஸ்வரூபத்தை அடைந்தவராக இருக்கின்றார். சொல்லுவதற்கு இதைத்தவிர வேறு என்ன உளது?

(வி-ம்) கர்மானுஷ்டானங்களுக்குப் பலன் கொடுப்பது மட்டுமல்லாமல், பலன் கொடுக்கும் சிவபெருமானுக்கும் அந்தச் சக்தியளிப்பது சிவநாமாவே.

41. ஹே பகவதி! சிவநாமமே! நான் கர்ம மார்க்கத்தையோ அல்லது பக்தி மார்க்கத்தையோ பின்பற்றினவன் அல்ல. என்னிடம் சிறந்ததாகக் கொள்ளக் கூடிய குணம் ஒரு துளியும் இல்லை. ஆனால் என்னிடம் உள்ள தோஷங்களோ கணக்கிட முடியாதவை. இதைத் தவிர இவ்வுலகில் என்ன பாபம் வேண்டும்? ஆகையால், ஹே தாயே! உன்னைக்காட்டிலும்எனக்கு வேறு கதி இவ்வுலகில்இல்லை

(வி-ம்) கர்மா, பக்தி ஒன்றும் இல்லாமல் அதே நேரத்தில் கணக்கற்ற குற்றங்களையுடைய பெரிய பாவிக்கும் சிவநாமமே கதி என்பது இதன் தாத்பர்யம்.

42. ஹே சிவநாமமே! அஜாமிளன் என்ற ஒருவன் தன்னுடைய பிள்ளையின் பெயரான 'நாராயண' என்ற சொல்லைச் சொன்னபோது அதனால் பயந்த யமதூதர்கள் அவனை விட்டுவிட்டார்கள். அதேபோல நீயும் சத்ருக்களை அச்சமடையச் செய்கின்றாய். உனது பக்தர்களை மகிழ்ச்சி அடையச் செய்கிறாய். உன்னுடைய பக்தர்களோ என்றால் எல்லோரிடமும் கருணையுள்ளவர்களாக இருக்கின்றார்கள். என்ன ஆச்சரியம்!

(வி-ம்) சிவநாமமானது விரோதிகளிடமிருந்து பக்தர்களை ரக்ஷிக்கும். பக்தனுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். ஆனால் சிவநாமபக்தனுக்கு எவரிடமிருந்தும் பயமில்லாததால் அவன் யாரையும் கோபிக்க வேண்டியதில்லை. அதற்கு மாறாக அவன் எல்லோரிடமும் கருணையுள்ளவனாக இருப்பான்.

43. ஹேதேவி! புஷ்பபாணங்களையுடையமன்மதனை பேதித்த பெருமானின் திருநாமமே! உன்னை இடைவிடாது

உச்சரித்தலாகிய அழகான பிரவாஹத்தில் விளையாடிக் கொண்டிருக்க எப்பொழுதும் ஆவல் கொண்டிருக்கும் என்னை, அந்தோ, இடையூறுகளின் மூலம் ஏன் விலக்கு கின்றாய்? தாயே! என்னுடைய குற்றங்களை மனதில் கொள்ளாமல் இருப்பாயாக.

(வி-ம்) சிவநாம பஜனத்தில் திளைத்து அதன் ஆனந் தத்தில் திளைக்க வேண்டுமானால் அதற்கும் அந்த சிவ நாமமே அருள்புரிய வேண்டும். "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்ற மாணிக்கவாசகர் திருவாக்கும் இங்கு நோக்குதற்குரியது.

44. என்னுடைய திருப்திக்காக இவன் வர்ண ஆச்ரமங்களுக்குரிய கர்மாநுஷ்டானங்களைச் செய்தானா? அல்லது, என்னுடைய பாதங்களைச் சேவித்தானா? இவன் என்ன செய்தான்? இவன் யார் என்று தன்னுடைய சபை யில் சிவபெருமான் என்னுடைய தகுதிகளை விசாரணை செய்யும் சமயத்தில் ஹே தாயே! சிவநாமாவே! வேறு தகுதிகள் இல்லாமற் போனாலும் இவன் என்னைப் பின் பற்றினவன் என்று தைர்யமாகக் கர்ஜனை செய்வாய்.

(வி-ம்) வேறு யோக்யதை இல்லாதவனையும் சிவநாமா தன்னுடைய அருளால் சிவனுடைய திருவருளைப் பெறும் படிச் செய்யும்.

45. ஹே தாயே! சிவ நாமாவே! சிவ என்ற உன் னுடைய எழுத்துக்களை முன்பின்னாக மாற்றினால் வருகிற வசி என்ற சொல்லினால் ஆதரிக்கப்பட்டவர்களையும், ஸ்வகர்மானுஷ்டானம் முதலிய வைதிக மார்க்கங்களில் நிலைத்தவர்களையும் நீ காப்பாற்றவில்லையா? அந்தோ! அந்த மாறுதலான சொல்லினால் அலக்ஷ்யப்படுத்தப்பட்ட வனாயும் இவ்வுலகில் உன்னை ஒருத்தியையே ஆதரவாய்க் கொண்டவனுமான என்னைக் காப்பாற்றுவதில் என்ன தயக்கம்?

(வி-ம்) சிவ என்ற எழுத்துக்களைத் திருப்பினால் வசி என்று ஆகிறது. வசி என்றால் இந்த்ரியங்களை நிக்ரஹம் செய்தவன் என்று பொருள். அத்தகைய இந்த்ரிய நிக்ரஹ முள்ளவரை அதாவது உன்னைத் தலைகீழாக வைத்தவரைக் காப்பாற்றும் உனக்கு உன்னைச் சரிவர வைத்திருக்கும் என்னைக் காப்பதில் என்ன தயக்கம்?

46. ஹே தாயே! சிவநாமமே! உன்னுடைய மஹிமையாகிற கடலின் திவலையின் ஒரு துளியை உணர்ந்த ஒரு புத்திமான் உன்னிடத்தில் இடைவிடாத ஈடுபாடு இல்லாமற் போனால் இவ்வுலகில் அருகிலே நீர் இருந்தும் நடைதடைபட்டுப்போன ஒரு தாகம் கொண்டனுடைய துன்ப நிலையை அடையமாட்டானா?

(வி-ம்) தாகம் கொண்ட ஒருவன் அருகிலே நீர் இருந்தும் அதனை அடைந்து தாகத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாதவன் என்ன துன்பத்தை அடைவானோ அதே துன்பத்தைச் சிவநாம மஹிமையை உணர்ந்த ஒருவன் ஏதேனும் இடையூறுகளினால் சிவநாம சங்கீர்த்தனம் செய்ய முடியாமற் போகும் போது அடைவான் என்பது இதன் தாத்பர்யம்.

47. ஹே சிவநாமாவே! என்னுடைய காமக்ரோதாதி நோய்கள், மனைவி மக்கள் முதலியவர்களால் வரும் மரணம் இப்படி எங்கும் எல்லையில்லாத துன்பக் கடலாகவுளது. இந்தத் துன்பக்கடலை உன் பக்தர்களிடமிருக்கும் உன்னுடைய கருணையாகிற அகஸ்தியர் சீக்கிரம் குடித்து என்னை எப்பொழுதும் உன் பக்கத்திலேயே விளையாடிக் கொண்டிருக்கும்படிச் செய்யட்டும்.

(வி-ம்) அகஸ்தியர் கடலைக்குடித்தது போல பக்தர்கள் மீது சிவநாமாவிற்கு ஏற்படும் கருணையானது அவர்களுடைய துன்பக் கடலைக் குடித்து அவர்கள் இடைவிடாது

சிவநாமத்தை ஜபம் செய்து கொண்டு இன்புற்றிருக்கச் செய்ய வேண்டும் என்பது தாத்பர்யம்.

48. தாயே! சிவநாமமே! என்னை உனது வலிமையி னால் பாபம் நீங்கினவனாய்ச் செய்தருளுவாயாக. என்னை உன் மடிமீது அமர்த்திக் கொள்வாயாக. ஒரு தாய் புழுதி யில் புரண்டுவந்த தன் குழந்தையைச் சுத்தம் செய்து தன் மடியில் மகிழ்ச்சியோடு அமர்த்திக்கொள்வது இல்லையா?

(வி-ம்) எவ்வளவு அழுக்குடன் இருந்தாலும் தாய் குழந்தையைத் தள்ளி விடுவதில்லை. சுத்தம் செய்து தன் மடியில் அமர்த்தி முத்தம் இடுகிறாள் அல்லவா? அது போலவே சிவ நாமமாகிற தாயும் தன்னுடைய பாப அழுக் கினின்றும் தன்னைச் சுத்தப்படுத்தி, மிக்க களிப்புடன் தன்னை அங்கீகரித்துக்கொள்ள வேண்டும்என்று வேண்டப் படுகிறது.

49. ஹே ஈச நாமாவே! நீ மனிதர்களின் முன்பு மிகவும் சுலபமாகக் காக்ஷியளிக்கிறாய். அவர்களது சிரமங் களைப் போக்குகிறாய். அவர்களுக்கு நலன்கள் வரும்படிச் செய்கிறாய். இப்படி உன்னுடைய புகழ் அதிகமாகி தேவதைகள் எல்லாம் பொறாமையினால் துன்பப்படும்படி நீ செய்ய வேண்டாமா?

(வி-ம்) மிகவும் பிரயத்தனப்பட்டே தெய்வங்களின் ரூபத்தைப் பக்தர்கள் தம்முன் வரவழைக்க முடியும். ஆனால் கடவுளின் நாமத்தை நாக்கின் மேல் வைத்துக் கொள்வது மிகவும் சுலபம். அதன் மூலம் துன்பத்தைப் போக்கிக் கொள்வதும் சுலபம். இப்படி மிகவும் அரிய காரியங்களை எளிதில் செய்துவிடுவதால் சிவ நாமத்தின் மேல் தேவர்கள் அசூயை அடைவார்கள் என்று கவி ஸமத் காரமாகச் சொல்கிறார்.

50. ஹே மன்மதனை அழித்த பெருமானின் திரு நாமமே! உன்னுடைய நாமசங்கீர்த்தனமாகிற அருவிகள் தேன், அம்ருதம், ஆகியவைகளின் வெள்ளங்களை விட அதிக மேம்பாடுடன் விளங்குகின்றன. புத்தியைத் தங்கள் வசப்படுத்தினவர்கள் அவைகளில் விளையாடுகிறார்கள். நான் ஒருவன் மட்டும் இவற்றின் சுவையை அறியாது கேடுற்றவனாயிருக்கிறேன்.

(வி-ம்) தேன், அம்ருதம் இவைகளின் இனிமையை விட ஈச்வர நாமத்தின் சுவை மிகவும் இனியது.

51. ஹே சிவநாமமே! இந்திரனுடைய பதவியை யாவது, பிரம்மாவினுடைய பதவியையாவது இவனுக்குக் கொடுக்க வேண்டியதாகி விடுமோ என்று நீ பயப்பட வேண்டாம். நான் இவைகளில் ஒன்றையும் விரும்பவில்லை. நீ உடனே என்னுடைய நாவினை வந்து அடைவாயாக. அந்த நாவினின்றும் நீங்காதிருப்பாயாக. இதுவே என்னுடைய ஆசை.

(வி-ம்) சிவநாம பஜனம் செய்பவர்களுக்கு பிரம்ம. விஷ்ணுவாதி பதவிகள் மிகவும் சுலபமாகக் கிடைக்கும் ஆனால் அவற்றை அவர்கள் விரும்பமாட்டார்கள் என்பது தாத்பர்யம். "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு..." என்ற திருவாசகத்தை இங்கும் நோக்குக.

52. ஹே ஈசனின் நாமமே! இம்மூவுலகத்தின் ஆதிபத்யத்தையும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் உன்னுடைய பக்தனுக்கு அளித்து விட்டு இந்த பக்தனுக்கு என்னால் ஏன்ன செய்யப்பட்டது என்று வெட்கத்தினால் நீ துன்பமடைகிறாய். நல்ல வேளையாய் உன்னுடைய துன்பம் உன்னை இடைவிடாது ஜபிக்கும் உன்னுடைய பக்த மணிகளால் அகற்றப்பட்டது. ஏனெனில் அவர்களுக்கு உன்னைத் தவிர மகிழ்ச்சியைக் கொடுப்பது வேறொன்றுமில்லை.

(வி-ம்) சிவநாமமானது புக்தி, முக்தி இவைகளைக் கொடுத்து இதற்கு மேலும் அருள் புரியும். ஆனால் பக்தர்களுக்கோ அச்சிவநாம சங்கீர்த்தனத்தைத் தவிர வேறு புக்தியோ முக்தியோ தேவையில்லை. "கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என்ற சேக்கிழார் பெருமானின் திருவாக்கை இங்கு ஒப்பிடுக.

53. ஹே தாயே! சிவநாமமே! உன்னுடைய திருவருள் என் விஷயத்தில் மறு பிறப்பு இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்று இருந்தால் அது அப்படியே இருக்கட்டும். உனக்கு என் நமஸ்காரத்தைச் செலுத்துகிறேன். உன்னுடைய ஜபத்திலேயே ஆழ்ந்து கிடக்கும் காரணத்தால் அழகான மறுபிறப்பை எனக்கு இல்லாமல் செய்ய வேண்டாம்.

(வி-ம்) சாதாரணமாகப் பெரியோர்கள் மீண்டும் பிறவாமையையே வேண்டுவார்கள். ஆனல் சிவநாம ஜபத்தின் ஆனந்தத்தை அறிந்தவர்கள்அந்நாம ஜபத்துக்குஏதுவான பிறவியை வெறுக்க மாட்டார்கள். விரும்பி வேண்டுவார்கள்.

54. ஹே தாயே! மன்மதனை அழித்த ஈசனின் திருநாமமே! எல்லா உலகுக்கும் இறைவனும்ஸகல விஷயங்களையும் அறிந்தவராயுமிருக்கின்ற சிவபிரானுக்கு என்னுடைய பாபக்குவியல்களைத் தெரியாமலேயே செய்து என்னைக் காப்பாற்றுகிறாய். உன்னுடைய இத்தகைய பெருந்திறமையை எடுத்துச் சொல்ல வல்லவன் யாவன்?

(வி-ம்) அன்பு மிகுந்த தாய் தன் குழந்தையின் தவறுதல்களைத் தந்தை அறிந்தால் தண்டித்து விடுவாரே என்று அவர் அறியாது மறைத்து அவரது அன்பை அக்குழந்தை பெறுமாறு செய்வாள். அது போலவே சிவ நாமமாகிய தாயும் பக்தனின் தவறுதல்களைத் தந்தையான பரமன்

அறியாதவாறு செய்து அவரது அருளை வாங்கிக் கொடுத்து விடுவாள் என்பது தாத்பர்யம்.

55. கயிலை நாதனின் திருநாமமே! தயவுசெய்து தாயான பார்வதியுடன் தந்தையான ஈச்வரன் என்னுடைய மனதில் தோன்றும் நிலையை தொடர்ச்சியாகக் கொடுப்பாய். அது போலவே என்னுடைய நாவின் நுனியில் எப்பொழுதும் வீற்றிருத்தலாகிய அருளைச் செய்வாய். எனது இரண்டு விருப்பங்களையும் நிறைவேற்றுபவள் நீ ஒருத்தியேயாகும்.

(வி-ம்) சிவநாம ஜபம் செய்யச் செய்ய அப்பெருமானின் திருஉருவம் நம் ஹிருதயாகாசத்தில் நிலையாகப் பிரகாசிக்கும்.

56. ஹே தாயே! ஈச்வரனின் நாமமே! சிவபெருமான் தோன்றுவதை விரும்புகிற உன்னுடைய பக்தனுடைய ஹிருதயத்தில் அவனது புருவ அசைப்பிற்கு அடிமையான சங்கரன் எப்படி பிரகாசிக்காமல் இருப்பார். உன்னுடைய கர்ஜனைகளால் நீ பயமுறுத்திக் கொண்டிருக்கும் பொழுது ஹிருதயத்தில் சிவபெருமான் தோன்றுவதற்குப் பகையான விஷயங்கள் எப்படி சஞ்சரிக்கும்? நீயே சொல்லுவாய்.

(வி-ம்) சிவ நாமத்தை ஜபிக்கும் பக்தர்கள் அவர்களது ஹிருதயத்தில் சிவபெருமானுடைய தோற்றத்தை காண்பார்கள். சிவபெருமான் வீற்றிருக்கும் பக்தர்கள் மனத்தில் மற்ற உலக இன்பங்கள் புகாது.

57. திருக்கயிலாய மலையில் வீற்றிருக்கும் நாதனின் திருநாமமே! இந்த பக்தன் என்னுடைய பெரிய இனிமையை அறிந்து கொள்ளட்டும். இந்த பக்தனுடைய நாவானது என்னை ஒரு பேர்தும் விடாமல் இருக்கட்டும் என்று எனக்கு நீ அருள் புரிவாயாக. இல்லாவிட்டால் உன் பக்தர்களிடத்தில் அபூர்வமாக நான் செய்த ஒரு

வணக்கமே என்னுடைய இந்த மன அபிலாஷையை நிறை வேற்றிவிடும் அல்லவா.

(வி-ம்) சிவ பக்தர்களுடைய சங்கமானது நம்மையும் சிவ பக்தியில் ஆழ்த்தி சிவ நாம ஜபம் செய்யச் செய்து விடும்.

58. ஹே கயிலாய நாதனின் திரு நாமமே! எப்பொழுது என்னுடைய இந்த மனமானது சிறிதளவாவது வேறு விஷயத்தை நாடுமோ, அப்பொழுதே அந்தோ என்னுடைய நாவினை விட்டுவிட்டு வேகமாக நீ விலகி விடுகின்றாய். ஹே அம்ப! அந்த மாதிரி ஏமாற்றுதல் நீ செய்யத் தக்கதல்ல. தாயே இங்ஙனம் ஏமாற்றுகிறவளாய் இருந்தால் வேறு யார் இதைப்பற்றி பேசக்கூடும்.

(வி-ம்) உலக விஷயங்களில் ஈடுபட்டால் சிவ நாம பஜனம் தடைப்பட்டுவிடும். அம்மாதிரி ஈடுபட்டு நான் உன்னை மறக்க நேரிட்டாலும் தாயான நீ என்னை மறக்கலாகாது. தாயின் கருணையானது குழந்தை தன்னை மறந்தாலும் தான் மறக்காமல் அதனை நினைந்து, அதற்கு வேண்டியவற்றை செய்து கொடுக்கும். அம்மாதிரியே சிவ நாமாவும் நமக்கு அருள வேண்டும் என்று வேண்டப்படுகிறது.

59. ஹே தாயே! முப்புரமெரித்த பிரானின் திரு நாமமே! எப்பொழுது நீ என்னை வஞ்சித்துவிட்டு தானாகவே விலகிப் போகிறாயோ அப்பொழுது நான் ஆஹார உபஹார முதலிய சொற்களைப் பேசுவதின் மூலம் உன்னை ஏமாற்றி என்னுடைய நாவினிடம் கொண்டு போகும் படி பிரம்ம தேவனின் அருள் என்பால் இருக்கட்டும்.

(வி-ம்) 'ஹர' என்ற எழுத்துக்கள் சேர்ந்த ஆஹார, உபஹார, முதலிய சொற்களைச் சொல்லுவதன் மூலமும் சிவநாம உச்சாரணம் ஏற்பட்டு விடும் என்பது தாத்பர்யம்.

இதே ஆசிரியர் அருளிய சிவபக்தி கல்பலதிகா என்ற நூலிலும் இதே கருத்தை வெளியிட்டிருக்கிறார். ஆஹர, ப்ரஹர, ஸம்ஹர என்று ஒரு வேடன் தனது மரண சமயத்தில் பிழைக்கும் வழி கேட்ட மகனுக்குக் கூறினான். பிறகு சிறிது நேரத்தில் உயிர் பிரிந்தது. அக்கொடிய வேடனும் அவன் கூறிய வார்த்தைகளில் 'ஹர' என்ற எழுத்துக்கள் கலந்திருந்தமையால் உத்தம சிவ கதி அடைந்தான் என்ற ஸ்காந்த புராண உபதேச காண்ட வரலாறு இங்கு கையாளப்பட்டுள்ளது. ஆஹர—அபஹரி, ப்ரஹர—அடி ஸம்ஹர—கொல் இவைகளே வேடன் கூறிய வார்த்தைகள். 'ஹர' சேர்ந்திருந்த காரணத்தினால் பாபம் விலகினது மட்டுமின்றி புண்யமும் சேர்ந்தது.

60. பிறைச்சந்திரனை தலையில்அணிந்தபெருமானின் நாமமே! உன்னை எவர் அடைக்கலம் புகுந்திருக்கிறாரோ, அவர்களுடைய பாதத் தாமரைகள் விளையாடுவதற்கான மார்க்கம் தேவக்கூட்டத்தின் கிரீடங்களாகிற ஸ்தலத்தில் அன்றோ?

(வி-ம்) சிவ நாம சங்கீர்த்தனம் செய்பவர்களுக்கு தேவர்களும் அடிமைகள் ஆகிறார்கள்.

61. மன்மதனை எரித்த பிரானின் திரு நாமமே! ஈசனின் விஷயத்திலும், அவருடைய பக்தர்கள் விஷயத்திலும் உருகாத மனம் உடையவனாகவும் மிகவும் ஈனமாக நடந்து கொள்பவனாயும் இருக்கிற இந்த என்னிடத்தில் நல்லவர்களுக்கு எங்ஙனம் அன்பு உண்டாகும்? ஆகையால் ஹே மாதாவே! என்னுடைய ஹிருதயத்தின் இந்த கடினத்தன்மையை உடைத்துத் தள்ளுவாய். ஹே தாயே! இவ்விஷயத்தில் நீ அல்லவோ எனக்குப் புகலிடம்?

(வி-ம்) இளகின மனது உள்ளவர்களுக்கே இறைவனிடம் பக்தியும், அடியார் பக்தியும் ஏற்படும். அத்தகைய

இளகின மனமும் கல் போன்ற மனது நெகிழ்ந்தால் தான் உண்டாகும். அம்மாதிரி நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்திட சிவ நாமமே சிறந்த துணையாகும். சிவநாம உச்சாரணம் செய்யச்செய்ய கல் போன்ற மனமும் உருகிச்சேறாகி அதில் இறைவனுடைய பாதத் தாமரைகள் மலரும்.

திருவிசநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச அய்யாவாள் அருளிச் செய்த "ஆக்யா ஷஷ்டி" யின் தமிழாக்கம்

"சிவநாம மஹிமை" இத்துடன் முற்றும்.

வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்தர்.

சிவம்

பிரதோஷகால வழிபாடு

"அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசு ஆயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே"—திருமந்திரம்.

திருநந்திதேவர் ஆற்றிய ஒருகோடி வருட தவத்தின் பலனாகச் சிவபெருமான் காட்சிதர அப்போது பெருமானை நோக்கி நந்தியெம்பெருமான் 'சுவாமி நான் தங்களை எப்பொழுதும் இமைகொட்டாமல் தரிசனம் செய்து கொண்டே இருக்க வரம் தரவேண்டும்' என்றுவேண்டினார் சிவபெருமான் அங்ஙனமே அருள்புரிந்து இன்றுமுதல் இப்பிரதோஷ வேளையில் ஒரே சமயத்தில் உனக்கும் எமக்கும் தீபாராதனை நடைபெறும் நீ வேறு நாம் வேறு ஆகமாட்டோம் என்று அருளினார்.

மாதந்தோறும் அமாவாசை, பௌர்ணமிகட்கு முன் வரும் திரயோதசி திதியன்று மாலை 4-30க்குமேல் 7-30 மணி வரை நிகழும் காலம் பிரதோஷ காலமாகும்.

அக்காலத்தில் நந்தியெம்பெருமானுக்கு அறுகுமாலை சாத்தி பதின்மூன்று நெய்த்தீபம் ஏற்றிவைத்துத் தோத்திரம் செய்து வழிபடுதல் வேண்டும். நந்தியின் இரு கொம்பு களின் இடைவெளி வழி சிவலிங்கதரிசனம் செய்தல் சாலச் சிறப்புடையதாகும்.

வழிபாட்டுப்பலன்

"பூசையின் பயன் அதிகமாம் பிரதோட பூசை
ஈசனைப் பணிந்து அர்ச்சனை செய்வரேல் எவர்க்கும்
பேசரும் சிவத்து ரோகமும்போம் கதிபெறுவர்
பாசம் நீக்கும் அப்பிரதோடம் பகருதும் கேண்மின்".

சாம்பியன் பவர் பிரிண்டர்ஸ், சென்னை-33.